**தமிழ்நாடு அரசு**

**சுருக்கம்**

பொதுப்பணிகள் - தமிழ்நாடு அமைச்சுப் பணி - திருச்சிராப்பள்ளி மாவட்டம் - திரு.கே.மோகனசுந்தரம் த/பெ. (காலஞ்சென்ற) திரு. எல். கிருஷ்ணன் - கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் - பணி வரன்முறை செய்து - ஆணை வெளியிடப்படுகிறது.

---

வருவாய்த்(பணி.9-1) துறை

அரசாணை(2டி) எண்.204 நாள்: 5.5.2003

படிக்கவும்:

1. திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவரின் கடித எண்.ந.க.அ4/26079/99, நாள் 23.7.99
2. சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் கடித ந.க.எண். ஆகு4 /57619/99, நாள் 21.7.2002.
3. அரசு கடித எண்.37632/பணி.9-1/2002-3, வருவாய்த் துறை, நாள் 20.11.2002.
4. அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலரின் கடித எண்.625/சிடி-பி1/2003, நாள்.24.2.2003.

***

**ஆணை:**

திருச்சிராப்பள்ளி மாவட்ட வருவாய் அலகில் ஈப்பு ஓட்டுநராகப் பணியாற்றியபோது 21.11.1995 அன்று காலமான திரு.எல். கிருஷ்ணன் என்பவரின் மகன் திரு. கே. மோகனசுந்தரம் என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சராக நியமனம் கோரி மனுச் செய்ததின் அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சராக நியமனம் பெற எல்லாத் தகுதிகளும் பெற்றுள்ளதால் திருச்சிராப்பள்ளி மாவட்ட வருவாய் அலகில் இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சராக 12.6.1998 முற்பகல் முதல் நியமனம் செய்துள்ளதாக திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

2. திரு. கே. மோகனசுந்தரம் அவர்களை 12.6.1998 முற்பகல் முதல் கருணை அடிப்படையில் முறையாக இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சராக அமைச்சுப் பணியில் திருச்சிராப்பள்ளி மாவட்ட வருவாய் அலகில் நியமனம் செய்ய மாவட்ட ஆட்சியர் அரசுக்கு முன்மொழிவு அனுப்பியுள்ளார். முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் மாவட்ட ஆட்சியரின் அறிக்கையினைப் பரிந்துரை செய்துள்ளார்.

3. மனுதாரர் கருணை அடிப்படையில் நியமனம் செய்ய எல்லாத் தகுதிகளும் பெற்றுள்ளார். அரசாணை (நிலை) எண்.174, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் 8.9.2000ன்படி தனியர் இளநிலை உதவியாளராக பணிபுரிய விருப்பம் தெரிவித்துள்ளார். இளநிலை உதவியாளர்/தட்டச்சர் பணியிடம் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வரம்பிற்குள் வருவதால், பணியாளர் தேர்வாணையத்தின் 1954 ஆம் ஆண்டைய ஒழுங்குமுறை விதிகளில், விதி 16(பி)யின் பிற்பகுதியின்படி காலஞ்சென்ற ஈப்பு ஓட்டுநர் திரு.எல். கிருஷ்ணன் அவர்களின் மகன் திரு. கே. மோகனசுந்தரம் அவர்களை தமிழ்நாடு அமைச்சுப் பணியில் திருச்சிராப்பள்ளி மாவட்ட வருவாய் அலகில் கருணை அடிப்படையில் முறையாக 12.6.1998 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பணியிடத்தில் முறையாக நியமனம் செய்ய தேர்வாணையம் இசைவு அளித்துள்ளது.